உ

ஓம்

# தமிழ்நாட்டுச் சிறுவர்களுக்கான
# தமிழ்ச்சைகை அரிச்சுவடி.

மேலத்தஞ்சை ஜில்லா போர்டு கூத்தாநல்லூர்
மிடில் ஸ்கூல் உபாத்தியாயர்
பிர்ம்மஸ்ரீ
நா. ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள்
இயற்றியது.

# TAMIL SIGNALLING CODE

**For use in Elementary Schools.**

BY

BRAHMASRI N. SRINIVASA SASTRI,
**Teacher,**
**Board Middle School,**
**KOOTHANALLUR.**

1935

All rights reserved

# FOREWORD.

The author, Mr. N. Srinivasa Sastri, has in his own resourceful manner adapted the art and technique of Signalling, found part of Scouting in English, to the requirements of the Tamil script, by reducing and resolving the numerous intricacies of the Tamil alphabet to its few fundamental symbolisms.

As an expression exercise, Signalling has a value in the art of teaching words and word combinations in the early stage in Elementary Schools. Combining as it does play with purposiveness, the art of the author well illustrates the play way of Caldwell Cook by usefully harnessing play, a prominent instinct of child nature, to language learning.

As it is an interesting experiment, it is worth a fair trial, and on that score, deserves due encouragement.

MANNARGUDI }
1-11-35 }

**A. SOURIRAJALU NAYUDU, B. A., L. T.,**
*Dy. Inspector of Schools,*
*Madras Education Department.*

# INTRODUCTION.

Mr. N. Srinivasa Sastri has produced an excellent system of signalling for the Tamil alphabet similar to the Semaphore system that is used for English. It may be thought by some that as the Tamil alphabet consists of 246 characters (18 consonants, 12 vowels, and 216 vowel-consonants), compared with 26 in English, an attempt to devise a signalling system must be hopeless. Mr. Srinivasa Sastri has shown that such an idea is quite wrong. There are 7 signs for the 12 vowels (long vowels being shown by the repeated sign for the short vowel), and 18 for the consonants, as well as 4 for the Sanskrit consonants. Vowel consonants are simply shown by the consonant sign followed by the vowel sign. Thus the whole alphabet can be represented by the signs of the Semaphore system.

Indeed this system has advantages over the English Semaphore system. Tamil is a phonetic language, so that, when, through long practice, the signals can be given rapidly, the words can be read, and not merely spelt, as must be the case in English. And it is probable that signalling would impress on a learner the fact that is so often forgotten, that Tamil is a phonetic language, so that the relation between written and spoken (and we may add, signalled) Tamil is, or should be, closer than it can be in English.

This system will have many practical advantages. Teachers in elementary schools may find it of use in teaching the spelling of words, as an aid to the teaching of writing. The method of signalling is a 'play' method, involving action, and observation, and the children will enjoy sending a message to others who are out of hearing distance.

It will also be useful for Scouts, who at present have to learn signalling in a language of which they may know very little. There is a tendency for those who have had a secondary education to despise their own mother tongue as inferior and less serviceable than English. Any system such as this, which shows that Tamil can be just as serviceable as English is to be heartily welcomed. Moreover, it will make the enjoyment of signalling available for those who have no knowledge of English. I commend it to the consideration of all teachers and Scoutmasters.

Findlay High School,
Mannargudi.
5th November 1935.

**E. B. THORP, M. A.,**
*Principal.*

# TAMIL SIGNALLING

## The Tamil Signalling Alphabet.

---

This system of signalling in Tamil depends on the position of the two arms (with or without flags) in relation to each other and can be read by sight. This is done by waving the arms at different angles as shown in the diagrams.

The system of circles is merely meant to assist in learning the system.

When messages are sent the sender always faces the reader and his right hand is used for beginning 'Ah' 'அ'.

The circle through which the arms revolve is divided into 8 parts as shown by the letters and the 'Ready' position in circle 1. There are seven positions in the 1st Circle besides the 'Ready' Position.

**Vowel Circle:**—The 1st circle is the Vowel circle which gives all the short Vowels. The same, when each of them done twice successively without interval gives the double vowels or the lengthened vowels. 'I' (ஐ) doubled shows the numerical sign, and 'ow' 'ஔ' doubled shows the aspirate ஃ.

**All the 18 Consonants are Done by Both the Arms.**

**The second Circle** is made by putting the right arm in the first position and keeping it there, and then moving the other through the remainder. This gives the six hard consonants. *The third circle* gives

all the *six nasal consonants.* This is done similarly by putting the right arm in the second position. *Circles 4 and 5* give the soft consonants; *Circles 6 and 7* give the Sanskrit letters. Numerals can be sent by the first and second circles after sending the numerical sign. The consonants with vowels added on, give all the letters of the entire Tamil Alphabet.

In placing this before the public, I feel confident that the extreme simplicity of the Code adopted—based as it is, entirely on the grammatical scaffold—will not fail to commend itself to all.

I hope that the same will be a very useful Kindergarten aid in the learning of the Tamil Alphabet by children in as much as it seeks to provide ample training for the hand and the eye and the other senses.

Suggestions for improvements from all lovers of the Tamil Tongue and Children will be thankfully received.

I am greatly indebted to Rev. E. B. Thorp, M.A. Principal, Findlay High School, Mannargudi, for the valuable help he has rendered in writing the Introduction to this book.

My sincere thanks are also due to Mr. A. Sourirajalu Naidu, B. A., L. T., Dy. Inspector of Schools, Madras Education Department, for his foreword, hints and suggestions.

*N. Srinivasa Sastri.*

# ஆசிரியர் முகவுரை.

இளைஞர்கள் விளையாட்டாகத் தமது கைகளைப் படங்களில் காட்டியவாறு இயக்கிச்சுலபமாய்ப் பார்வை தூரத்தில் சுமார் 200 கஜம் முதல் 400 கஜம் வரையில் உள்ள ஒருவனிடம் சைகை மூலம் பேசவும், அவன் அவ்வாறே இயக்கும் சைகைகளைக்கொண்டு அவன் சொல்லும் செய்தியையறியவும் கூடிய சாதனம் ஆங்கில மொழியில் இருந்து வருவதை யாவரும் அறிவோம்.

அத்தகைய வசதி உயர்தனிச் செம்மொழியாம் நம் தாய்ப்பாஷையில் இல்லாத குறையை நீக்கக்கருதியே சென்ற இருபது வருஷகாலமாகப் பலதிறப்பட்ட கலாசாலைகளில் யான் அடைந்துள்ள அநுபவத்தின் பயனாலும் என் மனத்தின்கண் உதித்த ஒரு பேராவினாலும், மிக எளிதான இம்முறையை ஓரளவு நம் தாய்மொழியிலேயே இயற்றி வெளியிடத்துணிந்தேன்.

நமது நாட்டுச் சிறுவர்கள் பள்ளிக்கூடங்களுக்குப் போகுமுன், அதாவது மிகச்சிறுபிராயமுதல் குழந்தைகளுக்கு இயல்பான விளையாட்டிற்குப்போதிய இடமும் வசதியும் மேனாட்டிலளிக்கப்படுவதுபோல் அதிகமில்லாவிடினும், ஒருசிறிதளவேனும் அளிக்கப்படுகிறதில்லை. ஆசிரியர்களும் பெற்றோர்களும் அதிகப்பாடுபட்டு மிகுந்த காலத்தை வீணாக்குவதுடன் குழந்தைகளுடனிருந்து அவர்களுக்குப் படிப்பதில் இன்பமும் ஆசையும் கொள்ளச்செய்யாது பயத்தையே ஊட்டி வருவதால் கற்பதில் பிரியமில்லாது செய்து அருவருப்பை உண்டாக்கி விடுகின்றனர்.

அவ்வாறின்றிக் குழந்தைகள் அரிச்சுவடி கற்க ஆரம்பிப்பது முதல் விளையாட்டையே முதன்மையாகவும் அடிப்படையாகவும் கொண்டுள்ள இம்முறை, இளைஞர்கட்கு இயல்பாயுள்ள சுறு சுறுப்பு, சேர்ந்து ஆடல், கண்

கண்டதுக்கை செய்தல், முதலிய நற்பழக்கங்களுக்குப் போதுமான அவகாசமும் இடமும் தருதலால், ஓர் அரிய போதனமுறையாகக் கொள்ளத்தக்கது.

நம் பாலர்கள் மகிழ்வுடன் பயிலவும் அவ்வாறு பயிலுங்கால், தேகவலிமை பெறப்போதுமான தேகப்பயிற்சிக்கும், ஆட்டத்திற்கும், உற்சாகத்திற்கும், அவர்கள் மனதில் இளமைதொட்டே சமயோசித சாமார்த்தியம் விட்டுக்கொடுத்தல், சிறுபிழைபொறுத்தல், கூட்டுறவு, ஒற்றுமை, தத்தம் வேலையைத்தாமே சுயமாய்ச் செய்தல் முதலிய பழக்கங்களைச் சிறிதுசிறிதாயமைத்து வளர்ப்பதற்கும் போதிய சாதனமளிப்பதுபற்றி நம் நாட்டுச் சிறுவர்கட்கு இம்முறை பெரிதும் பயன்படும் என்பது எனது துணிவு.

சென்ற 1928ம் ஆண்டு சிதம்பரத்தில் நடைபெற்ற (XX Madras Provincial Educational Conference and Exhibition-) 20வது சென்னை மாகாணக் கல்வி மகாநாட்டுப் பொருட்காட்சிக் கழகத்தார் இத்துறையில் என் உழைப்பை மெச்சி ஓர் முதல்தரப்பதக்கமும், நற்சான்று பத்திரமும் அளித்தனர் என்பதையும் வணக்கமாய்த் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இப்புத்தகத்திற்கு ஆங்கிலத்தில் முகவுரை எழுதித் தந்த மதராஸ் கல்வி இலாக டிபுடி இன்ஸ்பெக்டர் மகா-௱-ஸ்ரீ A. சௌரிராஜலு நாயடு, B.A., L.T., அவர்களுக்கும், அறிமுகம் எழுதிக்கொடுத்த மன்னார்குடி பின்ட்லே ஹைஸ் ஸ்கூல், பிரின்ஸிபால், ரெவரண்டு E. B. தார்ப், M.A. அவர்களுக்கும் என் மனமார்ந்த வந்தனத்தை செலுத்துகிறேன்.

ஆசிரிய நண்பர்களும் தமிழ்ப்பற்றுள்ள அன்பர்களும் என்னை இம்முயற்சியில் ஊக்குவித்து ஆதரவளிப்பதுடன் இதன் முற்போக்கிற்கான அபிப்பிராயங்களையும் தந்துதவுமாறு வேண்டுகிறேன்.

இங்ஙனம்,

**நா. ஸ்ரீநிவாஸ சாஸ்திரி.**

# கற்பிக்கும் முறை.

ஆரம்பப்பள்ளிக்கூட ஆசிரியர்கள் குழந்தைகளிடத்தில் அதிக அன்பு காட்டி அவர்களுடனிருந்து அவர்களோடு விளையாடியும் பழகியும் கற்பித்து வரவேண்டிய தவசியம் என்பதை மறக்கலாகாது.

ஆசிரியர்கள் நாள்தோறும் கற்பிக்கும்பொழுது இப்புத்தகத்தில் கொடுத்திருக்கும் படங்களை மாணவரிடம் காட்டி அவர்களை அவ்வாறே கைகளை இயக்கும்படிப்பயில்விக்கவேண்டும். அதன்பின் எழுத்துக்களுக்கான சைகைகளின் அமைப்பைத் தாமே செய்துகாட்டி அறிவித்தல் சாலச்சிறந்தது.

சிறு குழந்தைகளுக்கு I முதல் III வகுப்பு வரையில் விளையாட்டிற்கான நேரங்களில் எழுதப்படிக்க கற்றுக்கொடுக்குங்கால் (Stick laying, Seed laying, Drawing) குச்சி வைத்தல், விதைகளை அடுக்குதல், சித்திரம் வரைதல் முதலிய Self activity பாடங்கள் சொல்லிக் கொடுக்கும்போது படத்தில் காட்டியபடி குச்சி வைத்தல் சித்திரம் வரைதல் மூலமாக எழுத்துக்களுக்கான உருவங்களோடு சைகைகளை வருவித்துக் காட்டிப்பழக்கலாம்.

அவ்வாறு தினந்தோறும் எழுதப்படிக்கக் கற்றுக்கொடுத்தபின் வெளியே குழந்தைகளை அழைத்துச்சென்று படங்களிற்கண்ட இம்முறையை அனுசரித்து அவர்களுக்குப் பயிற்சி செய்வித்தால் அவர்களுக்கு தேக ஆரோக்கியத்தையும் சந்தோஷத்தையும் அளிக்கும்.

முதல் இரண்டு வகுப்புகளில் சிறுவர்களுக்கு எழுத்துக்களைச் சொல்லிக்கொடுக்குங்கால் படங்களைக்காட்டி எழுத்துக்களுக்கான சைகைகளைத் தனித்தனி செய்யவும் தேகாப்பியாசமாகக் கற்பித்துப் பழக்குவதே போதுமானது.

மேல் III, IV, வகுப்புகளில் சற்றுப் பயிற்சித் திறமையடைந்த பிறகு உயிர்மெய்யெழுத்துக்களையும் சிறு

வார்த்தைகளையும், அமைக்கக் கற்பிக்கலாம். வகுப்பு உயர உயர வேகமும் பயிற்சித்திறமும் அதிகரித்தல் அவசியம். சற்றுப்பயிற்சித் திறமை யடைந்த பிறகு அமைக்கும் முறையைப்படத்தில் காட்டியபடி கற்பலகைகளில் எழுதிக் காட்டும்படி செய்யலாம். வயது முதிர்ந்த சிறுவர்களை விரிவான சமாசாரத்தைக் குறித்துச் சுருக்கமாய் எழுதி யமைத்துக்கொண்டு அவற்றை இப்புத்தகத்தின் முடிவில் கண்டபடி அனுப்பப்பழகலாம்.

III, IV, வகுப்புகளில் கடிகாரம்போல் அட்டையில் கத்தரித்து கைகளுக்குப்பதிலாக சிறிய பெரிய முட்களைக் கொண்டு எழுத்துக்களுக்கான சைகைகளையும் காட்டிப் பிள்ளைகளிடமிருந்து வருவிக்கலாம்.

இன்னும் காகிதத்தில் ஒரு வட்டம் வரைந்து அதை எட்டு சரிபாகங்களாகப் பிரித்து ஒவ்வொரு பாகத்திற்கும் சில நிறங்களைப் பூசச்செய்வதும் மிக உபயோகமாகும். இவ்வாறு செய்தல் சரியான கோணங்களின் உருவத்தை ஆக்குமாறு உணர்த்தும்.

புத்தகத்தில்கண்ட படங்களைப் பெரிதாக எழுதிச் சுவற்றில் தொங்கவிடுவது சாலச்சிறந்தது.

பள்ளிக்கூடத்தில் வகுப்புச்சுவற்றில் சிறு பையனைப் போல் ஒரு படம் வரைந்து கைகளை மாத்திரம் அசையுமாறு அமைத்து அவற்றை இயக்கிக்காட்டலாம். இன்னும் கைகாட்டி மரம்போல் அமைத்துக்கைகளை அசைத்துக் காட்டிக் கற்பிக்கலாம்.

இவ்வாறு பிள்ளைகளுக்கான விளையாட்டுகளுடன் சம்பந்தித்து போதித்தும் அவர்களுக்கு உற்சாகமும் சந்தோஷமும் அதிகரிக்கச்செய்து அபிவிருத்தி செய்யலாம்.

பிழையின்றித் திருத்தமாக எழுத்துகளுக்கான உருவங்களை (சைகைகளை) அமைக்கிறார்களாவெனக் கவனிக்க வேண்டுவது இன்றியமையாதது.

கற்றவற்றை அடிக்கடித்திருப்புதல் அவசியம்.

## சுலபமான முறை.

மிக எளிதாக மனதில் பதியவும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளும் பொருட்டுப் பின்பற்றிய முறைகளாவன :-

தமிழ் எழுத்துக்கள் 247, வடமொழி எழுத்துக்கள், ஜ, ஷ, ஸ, க்ஷ, முற்றுப்புள்ளி யுள்பட, 252ஐயும் இரு கைகளைக் கொண்டு குறிப்பாகக் காட்டுமாறு 32 அடையாளங்கள் காட்டப்பட்டிருக்கின்றன.

எழுத்து என்பது ஒலியை உணர்த்தும் அடையாளம். அஃதேபோல் சைகை என்பது ஒலிக்கும் எழுத்தையுணர்த்தும் அடையாளமாம். இவ்வடையாளங்கள் வாயிலாகத் தமிழ் எழுத்துக்களனைத்தையும் கைகளை அசைத்துக்காட்டுவதால் பிறரறியுமாறு பேசுவதேபோல் காட்டக்கூடும்.

தமிழ் இலக்கண முறையை முற்றிலும் தழுவியே வரிசைப்படி ஐந்தே சுற்றுகளாகப் பிரித்து, ஒவ்வொரு சுற்றும் ஒவ்வொரு இனமாக ஆக்கப்பட்டிருக்கிறது.

முதல் சுற்றில் முதலெழுத்தெனப்படும் உயிரெழுத்துக்கள் பன்னிரெண்டும் (குறில் 5, நெடில் 7) இவற்றின் அமைப்பையும் இயக்கும் முறையும் அமைக்கப்பட்டிருக்கிறது.

இரண்டு முதல் ஐந்தாம் சுற்று வரை வல்லின மெல்லின இடையின மெய்யெழுத்துக்கள் பதினெட்டும் வரிசையாகக் காட்டும் வகை அறியலாம்.

6, 7 இவ்விரண்டு சுற்றுகளால் வடமொழி எழுத்துக்களான ஜ, ஷ, ஸ, க்ஷ, இந்நான்கும் விளக்கப்பெற்றுள.

முதற் சுற்று முடிந்ததும் இரண்டாம் 'சுற்று' கற்பிக்குங்கால் ஒவ்வொரு மெய்யெழுத்துடன் உயிரெழுத்துக்களைச் சேர்த்துச்செய்யும் முறையைக் கற்பித்து உயிர்மெய்யெழுத்துக்கள் வருவதைக் கண்டறியுமாறு கற்பிக்க வேண்டும்.

அவ்வப்போது மாணவர் சிற்றறிவுக்கும் அநுபவத்திற்கும் ஏற்றவாறு சிற்சில சொற்களையும் தொடர் மொழிகளையும் காட்டப் பழகுதல் மிகப் பயன் தரும்.

உயிரின் உதவியின்றித் தானே இயங்கமுடியாத (புள்ளியுள்ள) மெய்யெழுத்துக்களைத் தனித்தனி உச்சரிக்க க, ங, ச, என்றுவது ககரம், சகரம் ஙகரம் என்றுவது உச்சரிக்கவேண்டும். இக், இங், இச் என்றும் சொல்லலாம். இப்படிச் சொல்லும்போது முன்னுல் உயிர் வருதல் காண்க.

உயிர் எழுத்துக்களைக் குறில் அ இ உ எ ஒ இவற்றை அவ்வாறே சொல்லப்பழக்க வேண்டும்.

இரட்டை ஒலிகளான நெடில் ஆ ஈ ஊ ஏ ஓ என்பவைகளை ஆ-(நெடில்) ஈ (நெடில்) எனச்சொல்லலாம். ஆஅ ஆவன்னு எனச்சொல்லாகாது.

இப்பழக்கங்கள் மாணவர் மனதில் இளமை முதல் சிறிது சிறிதாக அமைந்து வருமாயின் நாளடைவில் அவர்கள் மனதில் இலக்கண அறிவு நிரம்பித் தேர்ச்சியடையச் செய்வதுடன் திருத்தமாய் எழுதவும் படிக்கவும் உணர்ச்சியூட்டி உற்சாகத்தைப் பெருக்கி, இலக்கணம் கற்பதில் பயத்தையும் அருவருப்பையும் ஒருவாறு ஒழிக்கும்.

இம்முறை நம் மொழியில் சுயமாய்த் தெளிவாகப் பேசும்பழக்கத்தையும் தமிழ்ப்பாஷை, தமிழ் நாடு முதலியவற்றினிடம் பேரன்பையும் அதிகரிக்கச் செய்யும்.

ஆசிரிய நண்பர்களனைவரும் எனக்கு ஆதரவளித்து இம்முறையைக் கையாளுமாறு பெரிதும் வேண்டுகிறேன்.


வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி!<br>
வாழ்க தமிழ் மொழியே!<br>
எங்கள் தமிழ் மொழி! எங்கள் தமிழ் மொழி!<br>
என்றென்றும் வாழியவே!

தமிழ் முழக்கம் எங்கும் செழிக்க.

# FIRST CIRCLE.
## VOWELS.
# முதல் சுற்று.

3 உ    4 எ    5 ஐ

2 இ    ஒ 6




1 அ    ஔ 7

### உயிரெழுத்துக்கள்.

ஒவ்வொரு சைகையும் ஒவ்வொரு எழுத்தையே காட்டும். அச்சைகை முடிந்ததும் 'தயார்' என்ற நிலைக்கு உடனே வந்துவிட வேண்டும்.

அ இ உ எ இந்நான்கும் வலது கையாலேயே செய்யப்பட வேண்டும்.

ஐ ஒ ஔ இம்மூன்றுக்கும் இடது கையே வரும்.


இச்சுற்றில் இரண்டு கைகளுக்கும் சேர்ந்து வேலையில்லை. ஒவ்வொரு சைகைக்கும் (வலது அல்லது இடது) ஒரே கை உபயோகிக்க வேண்டும்.

அ இ உ எ ஒ இவற்றை இரட்டிக்க அவற்றின் நெடில் ஆ ஈ ஊ ஏ ஓ வரும்.

ஐ இரட்டிக்க நம்பர் அல்லது இலக்கம் (எண்) ஆரம்பம் எனவும் 'ஔ' இரட்டிக்க ஃ எனவும், கண்டறிவோன் 'ஔ' இரட்டித்துக்காட்ட, 'சரி மேலே செய்' எனவாகும்.

# SECOND CIRCLE.
## HARD CONSONANTS.
# இரண்டாம் சுற்று.

9 0
ச் ட் த்

8 க்  ப்

ற்

### வல்லின மெய்யெழுத்துக்கள்.

இச்சுற்றில் இரு கைகளுக்கும் வேலை இருக்கிறது. வலதுகை 'அ' என்ற இடத்தில் நீட்டிப்பிடித்தபடி இடது கையால் வலப்புறமிருந்து சுற்றிவா ஒவ்வொரு இடத்தில் நீட்டும்போது ஒவ்வொன்றாக வரிசைக்கிரமமாக மெய் யெழுத்துக்களுள் க் ச் ட் த் ப் ற் என்ற வல்லின ஆறும் வரும்.

இஃமெய்யெழுத்துச் சைகைகளுடன் முதற்சுற்றுக்கான சைகைகளைச் சேர்த்துச்செய்ய உயிர்மெய்யெழுத்துக்கள் வரும்.

இவற்றை சேர்க்குங்கால் உதாரணமாக சைகை என்பதை சகர உற்று ஐ உயிர் எனச்சொல்லலாம்.

சஐ, ஐயன்ஐ எனச்சொல்லலாகாது. வா என்பதை வகரமெய் ஆ நெடில் எனச் சொல்லவேண்டும்.


# THIRD CIRCLE.

## SOFT CONSONANTS.

# மூன்றும் சுற்று.

ஞ் ண் ந்

ங்




ம்

ன்


### மெல்லின மெய்யெழுத்துக்கள்.

வலதுகை 'இ' 2 என்ற இடத்தில் நீட்டியபடி இடது கையால் படத்திற் காட்டியவாறு சுற்ற, ங் ஞ் ண் ந் ம் ன் என்ற மெல்லின எழுத்துக்களாறும் வரிசையாக வருகின்றன. ங் ஞ் இவ்விரண்டிற்கும் சிறிதே வித்யாசமிருத்தலாலும் ங் என்ற எழுத்து தமிழ் மொழியில் அதிகம் வாராமையாலும் அதிக பேதமில்லாததுபற்றி 'இ' என்றவிடத்தில் வலக்கை நீட்டியதற்கு சற்று மேல் இடது கையைக்காட்ட 'ங்' எனவும் சரியாக 'உ' விலிருக்க 'ஞ்' எனவும் கொள்ளவேண்டும்.

# FOURTH CIRCLE.

## MEDIAL CONSONANTS.

# நான்காம் சுற்று.




### இடையின மெய்யெழுத்துக்கள்.


இச்சுற்றில் வலது கை ‘உ’ 3ல் நீட்டியபடி இடது கையால் மேலே இடதுபுறமாகவே சுற்றிவர, இடையின மெய்யெழுத்துக்களுள் ய், ர், ல், வ் இந்நான்கும் வரிசையாக வரும்.

இனி தமிழ் நெடுங் கணக்கில் மிகுந்திருப்பது ழ், ள், இவ்விரண்டே. இதை அடுத்த அப்பியாசம் ஐந்தாம் சுற்றில் காண்க.

# FIFTH CIRCLE.

## MEDIAL CONSONANTS (CONTINUED.)

# ஐந்தாம் சுற்று.




## இடையின மெய்யெழுத்துக்கள் தொடர்ச்சி.

இதில் பாக்கியுள்ள இடையின மெய்யெழுத்துக்கள் ழ், ள், இரண்டும் • முற்று என்பதுவும் காட்டப்பட்டிருக்கின்றன.

கடைசியாகச் சைகை முடிந்தது. நிறுத்துப்புள்ளி என்பதையும் பார்த்தறிபவன் காட்டினால் மறுபடி செய் எனவும் கொள்ளவேண்டும்.

இவ்வாறாகத் தமிழ் எழுத்துக்கள் 247ம் குறிப்பால் சைகைக் காட்டக்கூடும் முறை விளக்கப்பட்டிருக்கிறது.

## வடமொழி எழுத்துக்கள்.

இனி வடமொழி எழுத்துக்களான ஜ் ஷ் ஸ் க்ஷ இந்நான்கும் முன் இணைக்கப்பட்டுள்ள படத்தைப்பார்த்து அறிந்துகொள்ளவும்.

இவைகளெல்லாவற்றிற்கும் இரண்டு கைகளுக்கும் இடது பக்கத்திலேயே வருகிறது குறிப்பிடத்தக்கது.

# இலக்கம்—எண்.

1 2 3 4 5 6 7 8 9 0 என்பனவற்றை அ இ உ எ ஒ ஏ ஓ ஔ க் ச் ட் என்னும் எழுத்துக்களே குறிக்கும். ஆனால் எண்ணிக்கை காட்டுவதற்கு முதலில் (எண்குறி) 'ஐ' இரட்டித்துக்காட்டியபின் செய்யவேண்டும். எண் முடிந்தபின் முடிவைக் காட்ட 'முற்று' என்னும் குறியைக் காட்டவேண்டும்.

தமிழ்ப் பாஷையிலுள்ள எழுத்துக்கள் 247. எனினும் எல்லாம் உபயோகத்தில் வழங்கப் படுகிறதில்லை. சுமார் 150 எழுத்துக்களே அதிகமாக உபயோகப்படுத்தப் படுகின்றன. இதிலும் சரிபாதி எழுத்துக்கள் அதிகமாக அடிக்கடி உபயோகப்படுத்தப்படுகின்றன. இலக்கணம் கற்கில் இது வெகு எளிதில் அறியலாம்.

நம் தாய் பாஷை உச்சரிப்புக்கொத்திருப்பதால் சிறிதும் சிரமமின்றிச் செவ்வனே பேசியபடி எழுதவும் கூடும்.

வியாபார முறைகட்கும் இன்னும் வெளிப்படையாக பிறராறியாவண்ணம் ஸம்பந்தப்பட்டவர்களுக்குள் விலாசம் என்ற பெயருடன் சில சங்கேதங்கள் நம் நாட்டு வழக்கத்தில் உள. உதாரணமாக வேங்கடாஜலபதி துணை செய்வார் என்பதற்கு 1 2 3 4 5 6 7 8 9, $\frac{3}{4}$ $\frac{1}{2}$ $\frac{1}{4}$ $\frac{1}{8}$ $\frac{1}{16}$ என்று வைத்துக்கொண்டு விவகரித்து வருவதைப் பலர் அறிவர்.

இன்னும் பெயர்களையும், விலாசங்களையும் முழுதும் உச்சரிக்காது, எழுதாது சில எழுத்துக்களைக் கொண்டே குறிப்பால் அறிவிக்கப்படுகிறது.

உதாரணம்:— நா. சீ. — கோ. நா. க்கு எழுதுவது.

இவற்றிற்கும் இம்முறையை கையாளக் கூடும்.

இன்னும் இதுபோன்ற தந்தி முறைக்கான சுருக்கங்களையும் இம்முறையில் சம்பந்தப்படுத்தி உபயோகிக்கவும் சாத்தியமாகும்.

# அனுப்பும் விதம்.

இச்சைகைகளைக்கொண்டு சமாசாரங்களை அனுப்பும் முறையையும் பார்த்தறியும்போது கவனிக்க வேண்டியவை களையும் ஆராய்வோம்.

ஒவ்வொன்றும் 4 அல்லது 5 பேர்களாக இருகக்ஷி களாகப்பிரிந்து கொள்ளவேண்டும்.

நால்வர் கூடி அனுப்பவும் மற்ற நால்வர் குறிப்பிட்ட தூரத்தில் இருந்து அறியவும் ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும். இந்த இடத்திலிருந்து இந்த இடத்திற்கு என் பதைத் திட்டம் செய்து கொண்ட பின்னர், அனுப்பும் செய்தியை முன்னதாகவே சுருக்கமாக எழுதிவைத்துக் கொள்ளவேண்டும். ஒரு கக்ஷி அனுப்பும் செய்தியை மற்ற கக்ஷியினர் முன்னதாக அறிந்து கொள்ளக்கூடாது.

ஒவ்வொருவனும் ஒவ்வொரு வேலையையே செய்யத் திட்டம் செய்து கொள்ள வேண்டும். அனுப்புவோனுக்கு அதுவே வேலை. வேறொருவன் அனுப்பப்பட வேண்டிய செய்தியைத் தனித்தனி எழுத்தாக ஒவ்வொன்றாய்ச் சொல்லிவரவேண்டும். அடுத்தவன் சரிவர செய்யப்படுகிறதா என்பதைக் கவனித்து அனுப்புவோனுக்கும் சொல்வோ னுக்கும் உதவியாயிருக்கவேண்டும். எஞ்சியவர் இதர விஷயங்களை கவனிக்கலாம். ஆனால் தம்முடைய கக்ஷிக் காரர்களும் எதிர் கக்ஷிக்காரர்களும், சரிவர கவனித்துத் தொடர்ந்து அறிகிறார்களா வெனப் பார்த்துவர வேண்டி யது ஒவ்வொருவனுடைய கடமையே யாகும். கக்ஷித் தலைவன் ஒருவனை ஏற்படுத்தி அவன் சொற்படி நடப்பது சாலச்சிறந்தது.

கண்டறியும் கக்ஷியிலுள்ளவர்களும் தங்களுள் ஒரு வனைப்பார்த்துச் சொல்லும்படி ஏற்படுத்திக்கொண்டு அடுத்தவனை அவனுக்குதவியாக நிறுத்தி ஒவ்வொரு எழுத்தும் தான் சரியாக அறிந்து கொண்டதற்கு அறிகுறி யாய் "சரி மேலே செய்" எனும் சைகையைச் செய்து

கொண்டே அடுத்தவனிடம் தான் கண்டு சொல்லிவரும் போதே எழுதிவரும்படி திட்டம் செய்து கொள்ள வேண்டும்.

மற்றுமுள்ளவர்கள் சரிவர அறிந்து எழுதி வரும்படி உதவி செய்து கவனித்துவர வேண்டியது.

இவ்வாறு இரு கக்ஷிக்காரரும் எளிதில் பேசுவதே போல் அறியக்கூடும்.

ஒவ்வொருவனும் தனித்தனி தனக்குத்தானே செய்யாது கூடிச்செய்தலால் கூட்டுறவுப் பழக்கம் ஏற்படுவதல்லாது, செவ்வனே திருத்தமாகச் செய்யவும், ஒவ்வொருவனும் தத்தம் வேலையைத்தாரதம்மியமின்றிச் செய்யவும், சமூக உணர்ச்சியையும் ஒற்றுமைக்கான ஆர்வமும், ஆற்றலும், ஏற்படுவதுடன் தேர்ச்சி முதிர்வதற்கான உற்சாகமும் போட்டித்திறமை முதலிய ஏற்படச் சாத்தியமாகும்.

## சைகை காட்டிச் செய்தி யனுப்பும்போது கவனிக்கவேண்டியவை.

அவசரமாக அனுப்பவேண்டும் என்ற எண்ணம் ஆரம்பத்தில் கூடாது.

அனுப்பும் விஷயம் அறியமுடியாதுபோயின் வீணாகும். "செய்வன திருந்தச்செய்" என்றதை மனதிலிருத்திச் செவ்வனே செய்யவேண்டும்.

அனுப்புபவனோ அல்லது படிப்பவனோ அதே கவனமாயிருப்பதன்றி இங்குமங்கும் பார்த்தலும் வேறு விஷயங்களில் கவனம் செலுத்தலும் கூடாது.

கோல்களாலும், கொடிகளாலும், இரண்டுமில்லாத காலத்தில் கைகளாலேனும் சைகை அனுப்பலாம்

அனுப்புபவனும், கண்டறிவோனும் சற்று உயரமான இடத்தில் ஒருவரை ஒருவர் நன்கு பார்க்கக்கூடுமாறு, தனக்குப்பின் செடிகளடர்ந்து எளிதில் கண்களில் படுமாறு, (பிரயாசை யின்றிக் கண்டறியுமாறு) நிமிர்ந்து நின்று கொள்ளவேண்டும். மறைவான இடங்களிலிருந்து அனுப்புவது பிரயோஜனப்படாது.

ஒவ்வொரு கக்ஷியிலும் ஒருவனே நின்று அனுப்பிவர வேண்டும். ஒருவனே கண்டறிந்து சொல்லிவர வேண்டும் மற்றவனும் சேர்ந்து நிற்கின் யார் செய்வது என்றுணர்வது கஷ்டம்.

கால்கள் இரண்டும் 10 அங்குலம் இடைவெளியிருக்கும்படி நிற்கவேண்டும்.

முதலில் சைகையனுப்பப்போவதாக எதிர்க் கக்ஷிக்காரனுக்குணர்த்தி அவன் அதைக்கண்டு தான் தயாராயிருப்பதாக குறிப்பால் தெரிவித்த பிறகே செய்தியை அனுப்பத்துவங்க வேண்டும்.

அனுப்புவோன் தனக்குதவியாய் நிற்கும் படிப்போன் சொன்னபிறகே அந்தந்த எழுத்திற்கான சைகையை செய்யவேண்டும். அவ்வாறே கண்டறிவோன் பார்த்து சொல்வதை ஒவ்வொன்முக அவ்வப்போதே எழுதிவர வேண்டும். ஒவ்வொரு சைகையையும் செய்யும்போது அது முடியும் வரை நடுவில் நிறுத்தக்கூடாது.


ஒவ்வொரு எழுத்தின் முடிவிலும் "தயார்" நிலைக்கு வந்துவிட வேண்டும்.

பதங்களையும் தொடர்மொழிகளையும் அனுப்பும்போது எழுத்துக்களைத் தொடர்ந்து செய்து முடிவில் சற்று தாமதித்துச் செய்ய வேண்டும். இது சிறுவர்கட்குப் பயிர்ச்சி முதிர முதிர அனுபவத்தில் உண்டாகும்.

ஒவ்வொரு எழுத்தையும் விளக்கமாகத் தெரிவிப்பது தான் முக்கியமானது அவசரமாகத் தெரிவித்தல் முக்கியமாகாது.


கொடிகளையும் கோல்களையும் கைகளுடன் சேர்த்து நீட்டிப்பிடிக்க வேண்டும்.

இது சரி



இப்படி பிடி

இது பிசகு



இப்படி பிடிக்காதே

கண்ணாடிமுன் நின்று பழகாதே.

## உபகரணங்கள்.

சிறுவர்கள் கொடிகளையும் கோல்களையும் அவரவர்களுக்குப் போதிய நீளத்திற்குமேல் வைத்துக்கொண்டால் சட்டை கிழியும். தயார் நிலையில் பிடிக்கும் காலத்து இரு நுனிகளும் கீழே படும்படி பிடிக்கவேண்டும். அதற்குமேல் நீளம் தேவையில்லை.

இக்கொடிகளையும் கோல்களையும் சிறுவர்கள் தாமே செய்துகொள்ள வேண்டும். தாமே செய்த சாமான்களை உபயோகிப்பதில் சிறுவர்களுக்கு அதிகப் பிரியம் உண்டு அவர்கள் அவ்வாறு தாமே செய்தவற்றை கருத்துடன் வைத்துக்கொள்ளப் பழகுவார்கள்.

தினந்தோறும் பத்து நிமிஷங்களேனும் விடாது பயிலவேண்டும். அவ்வாறு பழகினால் பழகப்பழக வேகம் அதிகரிக்கும்.

பழகுங்கால் கொடி, கோல் அவசியமில்லை சரியான படி செய்யக் கற்றுக்கொள்ள வீட்டில் வெள்ளை பூசிய சுவற்றில் பின்னாலிருந்து வெளிச்சம் விழும்படி, நின்று கொண்டு நிழலில் சரியான கோணங்கள் விழும்படி செய்து பார்த்துப் பழகலாம்.

அனுப்பும் செய்தியைப் பயிற்சி பெற்ற ஒருவனைக் கொண்டு செய்ய பார்த்து அறிதல் அத்தியாவசியமானது.

ஒவ்வொரு கையும் நீட்டப்படவேண்டிய அளவு ஒரு வட்டத்தில் எட்டில் ஒன்று 45" (டிகிரி) இதற்கு ஒரு காகிதத்தை எடுத்து வட்டமாகக் கத்தரித்து எட்டாக மடித்துப் பின் அதைப்பிரித்து பார்த்து அதன்படி கைகளை நீட்டப்பழகிக்கொள்ளலாம்.

நேரே நிமிர்ந்து நின்று சரேலெனச் செய்யப் பழக வேண்டும் மெதுவாகவேனும் கைகளைக் கோணல்மாணலாகவேனும் செய்தல் கூடாது.

# அனுப்பும் செய்தி.

செய்திகளைச் சைகை மூலம் அனுப்பவேண்டியிருத்தலால் கூடுமானவரையில் சுருக்கமாகவே முன்னதாக எழுதிவைத்துக் கொள்ளவேண்டும்.

அவ்வாறு சுருக்கமாக எழுதிக் கொள்ள சில விதிகள் உண்டு.

நம் பாஷையில் வழக்கில் அநேக சுருக்கெழுத்துக்கள் உள. அவற்றை அறிந்து கொள்ளுதல் மிக உபயோகமானது.

வருஷம், மாதம், தேதி, வாரம் இவற்றை ஒவ்வொரு எழுத்தைக்கொண்டே அறிவிக்கலாம். இவைகளேயன்றி சில விசேஷ குறிப்புகளைப் பயிற்சித்திறமேற்பட்ட பின் கீழ்க்கண்டப்படி சுருக்கங்களையமைத்துக் கொள்ளக்கூடும்.

## சில செய்திச் சுருக்கெழுத்துக்கள்.

| | |
|---|---|
| அ அ அ அ | அதிக அவசரம் |
| விர் வா | விரைவில் வரவும் |
| ச் ச் | செய்தி சொல் |
| ம் ச் | முன் செல் |

| | |
|---|---|
| ச் அ | சீக்கிரம் அனுப்பவும் |
| உ த் | உதவி தேவை |
| ப் த் | பணம் தேவை |
| ம் க் | மறைந்து கொள்ளவும் |
| ந் வ் | நாளை வாருங்கள் |
| ப் ஒ | போஸ்டு ஆபீஸ் |
| ப் ஒ ஸ் | போலீஸ் ஸ்டேஷன் |
| ஆ ஸ் | ஆஸ்பத்திரி |
| ம் உ த் | முதல் உதவி தேவை |

ஆனால் இவ்வாறான வகையை பரஸ்பரம் முன்னதாக அறிந்திருந்தாலன்றி பயன்படா. அனுப்புவதைவிட அனுப்பப்படுவதை அறிவதே மிக்க அவசியமானது.

இரவில் அவசியம் நேரிடின் இம்முறையைக்கொண்டு செய்தி அறிவிக்க முடியும். அப்போது இதற்குச்சில உபகரணங்கள் தேவை.

ஒரு விளக்குஸ்தம்பம் நாட்டி அதன்கீழ் நின்று கொண்டு இரண்டு கைகளையும் இடம் வலம் அறியுமாறு செய்துகொண்டு செய்தியனுப்பலாம்.

இடம் வலம் குறிக்க பச்சை சிவப்பு விளக்குகளைக் கையில் பிடித்துக்காட்டலாம். மின்சார விளக்குகளை உபயோகிக்கலாம்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

பாரதி பிரஸ், மன்னார்குடி.